# நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பு

## திட்ட முன்மொழிவு – பெருந்தோட்ட துறையில் காணப்படும் சமூகங்களை மேன்மைப்படுதல்

நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்பானது பெருந்தோட்டத்தில் வாழும் மக்களின் சமூக விருத்திக்காக திட்ட முன்மொழிவுகளை வரவேற்கிறது. முன்மொழியப்படும் திட்டம், செயற்பாடுகள். மற்றும் தீர்வுகள்/ விளைவுகள் மனித உரிமைகள் மற்றும் சமூக பொருளாதார பிரச்சனைகளை அடையாளப்படுத்துவதாக காணப்படலாம்.

### திட்ட முன்மொழிவுகளுக்கு அழைப்பு விடுப்பதற்கான நோக்கங்கள்

இலங்கையில் பெருந்தோட்டத்தில் நீண்டகால சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகப் பாடுபடுவதற்கும், அதற்கான பங்களிப்பைச் செய்வதற்குமான மக்களின் ஆற்றலை வலுப்படுத்துவதற்காகவே முக்கியமாக இந்த திட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.

### தகைமைப் பிரமாணம்

நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கு ஒத்திசைவான பணிகளை மேற்கொள்கின்றதும், அதன் நிதியளிப்பு வழிகாட்டு முறைமைகளை நிறைவேற்றும் வகையிலான பணிக்கூற்றையும் தொலைநோக்கையும் தன்னகத்தே கொண்டுள்ளதும், அதன் மூலோபாய நிகழ்ச்சித்திட்டப் பரப்புக்களுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை தொடர்பில் பணியாற்றுகின்றதுமான நிறுவனங்களுக்கு நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பு ஆதரவளிக்கும். அதிலும் குறிப்பாக அதன் நிகழ்ச்சித்திட்டப் பரப்புக்களுள் பின்வரும் நான்கிற்கு சார்பானதாகவும் அமையும்.

1) ஜனநாயகம், நல்லாட்சி, நிறுவன விருத்தி ஆகியவற்றை ஊக்குவித்தல்
2) சமூக நீதியை ஊக்குவித்து அதனை அடைந்து கொள்தல்
3) பெண்களின் உரிமைகளை ஊக்குவித்து அவற்றைப் பாதுகாத்தல்
4) சமூக நிலைமாற்றத்தில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட தொனிப்பொருள்சார் நிகழ்ச்சித்திட்டப் பரப்பினுள் வருகின்ற திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றனர். செயற்றிட்டமானது பூகோள ரீதியிலான மட்டுப்பாடுகள் ஏதுமின்றி இலங்கையின் எப்பாகத்திலும் அமுல்படுத்தப்படலாம். உப கொடைகள் அனுமதிக்கப்படமாட்டா. முன்மொழியப்படும் செயற்பாடுகள் தங்களால் மட்டுமே அமுல்படுத்தப்படும் என்பதையும், அவை மூன்றாம் தரப்பினருக்கு உப ஒப்பந்தத்திற்கு அல்லது உப கொடைக்கு விடப்படமாட்டாது என்பதையும் விண்ணப்பதாரர்கள் மிகத் தெளிவாக நிரூபிக்க வேண்டும்.
ஒரு நிறுவனத்திடமிருந்து ஒரு விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும் (தனியாகவோ அல்லது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களுடன் இணைந்தோ விண்ணப்பித்தல்)

- முறைப்படி பதிவு செய்யப்பட்ட சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs), உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), மற்றும் பெருந்தோட்ட மக்களுடன் வேலை செய்யும் நிறுவனமாக காணப்பட வேண்டும்.

- தனிப்பட்டவர்களிடமிருந்து கொடை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. (ஆனால், இன்னுமொரு நிறுவனத்தில் இணைந்து அதனூடாக விண்ணப்பிக்க முடியும்) அந்த நிறுவனமானது இந்த திட்ட முன்மொழிவுக்கு விண்ணப்பிக்க தகமைப்பிரமானம் மற்றும் திட்டத்தை அமுல்படுத்த சட்ட மற்றும் நிதி ரீதியாக பொருத்தமாக இருக்க வேண்டும்.
- செல்லுபடியான பதிவு இல்லாத நிறுவனங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டா. (விதிவிலக்காக, விண்ணப்பதாரர் செல்லுபடியாகும் பதிவுள்ள பிறிதொரு நிறுவனத்துடன் பங்காக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது ஏற்றுக்கொள்ளப்படும்.) அத்தகைய இணை நிறுவனம் இந்த அழைப்பிற்கான பிரமாணங்கள் அனைத்திற்கும் இணங்கியொழுக வேண்டும்.
- நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பின் கொடைத்திட்டம் ஒன்றை ஏலவே கொண்டுள்ள பங்காளர்கள், அது நிறைவடையும் வரை புதிய கொடைத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி அற்றவர்களாவர்.
- நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்பினாலோ அல்லது வேறெந்தக் கொடை நிறுவனத்தினாலோ முன்னர் நிதியளிக்கப்பட்ட திட்டங்களை அமுல்படுத்துவதில் சிறந்த முன்னேற்றத்தைக் காண்பிக்காத நிறுவனங்களுக்கும் நிதி வழங்கப்படமாட்டாது.
- அரசாங்க நிறுவனங்கள் அல்லது திணைக்களங்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பு கருத்திற் கொள்ளாது. அரசியல் தொடர்புகளைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியளிப்புக்களை வழங்காது.
- பெருந்தோட்ட மக்களை பயனாளிகளாக கருத்தில் கொள்ளப்படாத முன்மொழிவுகள் இந்த திட்ட முன்மொழிவில் கருத்தில் கொள்ளப்படாது.

## செயற்றிட்டங்களின் வகைகள்

கீழே சுட்டிக்காட்டப்படும் வகைகளைச் சேர்ந்த செயற்றிட்டங்களுக்கு / செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படலாம் எனினும், அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை.

1. பெருந்தோட்ட மக்களின் உரிமையை வலுப்படுதலும் பாதுகாத்தலும்
2. பொருளாதாரம் சார்ந்தவை – பெருந்தோட்டத்தில் காணப்படும் நலிவுற்ற சமூகங்களுக்கான வாழ்வாதாரம், பயிர்ச்சி மற்றும் சேவைகளை; வளங்களை பெறக்கூடியதாய் வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.
3. பால்நிலைசார் நீதி – பெருந்தோட்டத்தில் பெண்களுக்கான சம வாய்ப்புக்களைத் தாமதப்படுத்துகின்ற, முறைமைப்படுத்தப்பட்டதும் கட்டமைப்பு சார்ந்ததுமான விடயங்களை இனங்கண்டு அடையாளப்படுத்தல்.
4. சமூக மற்றும் பொது வாழ்வில் பங்கேற்பதற்கும், வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், தனது உரிமையை பெறுவதற்கும் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதற்குமான வாய்ப்புக்களைப் பெருந்தோட்டத்தில் காணப்படும் பெண் தொழிலாளிகளுக்கு வழங்குதல்.
5. புலம்பெயர் பெருந்தோட்ட தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தல
6. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள். குறிப்பாக இளைஞர்களை ஈடுபடுத்துதல்.
7. கலைகள் மூலம் சமூகச் செயற்பாடுகளையும் திறனாய்வுச் சிந்தனைகளையும் ஊக்குவித்தல்
8. மது மற்றும் மற்ற வகையான போதைபொருள் அடிமைத்தனத்தை குறைக்க முழுமையான மற்றும் நிலையான நடவடிக்கை எடுத்தல், தேவையற்ற கடன்களை குறைத்தல், சேமிப்பை மற்றும் ஊட்டச்சத்து நிலையை அதிகரித்தல், குடும்ப மேம்பாட்டு திட்டத்தை ஆதரித்தல் மற்றும் உடல் மற்றும் சுகாதார நிலைமையை விருத்தி செய்தல் போன்ற சமூக வலுவூட்டல் நிகழ்சிகளை CSO's முன்னெடுத்தல்.

## கொடை அளவும் திட்டங்களின் காலப்பகுதியும்

நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்படும் தொகையானது, உத்தேச வரவுசெலவுத் திட்டத்தின் மொத்தத் தொகையின் 80% இற்கு மேலதிகமானதாக இருக்க வேண்டும். உத்தேச செயற்றிட்டத்தின் கால அளவு குறைந்தது 12 மதாதங்களாகவும், கூடியது 24

மாதங்களாகவும் இருத்தல் வேண்டும். செயற்றிட்டங்கள் எதிர்வரும் 2017 முதலாம் காலாண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

## விண்ணப்பிக்கும் முறை

பின்வரும் இணையத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்: http://www.neelan.org/download_forms.html (விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்வதில் ஏதேனும் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் அவற்றை மின்னஞ்சல் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கோரி programme.officer@neelan.org எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.)

விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும், மின்னஞ்சல் - programme.manager@neelan.org (விடயத்தலைப்பாக **'NTT/Nov/2016/001** விண்ணப்பதாரியின் பெயர்' ஐக் குறிப்பிடவும்) தபால் -

**NTT/Nov/2016/001**

The Programme Manager

Neelan Tiruchelvam Trust (NTT),

16/6A, Ward Place (Mohideen Terrace),

Colombo 7.

## விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியும்

விண்ணப்பங்கள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வு செயன்முறைகளில் ஏற்படும் தாமதமங்களைத் தவிர்ப்பதற்காக அவை ஆங்கிலத்தில் தயாரிக்கப்படுதல் வரவேற்கத்தக்கது.

விண்ணப்பங்கள், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட சகல துணை ஆவணங்களையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் (உரிய துணை ஆவணங்கள் இன்மையால்) கவனத்தில் எடுக்கப்படமாட்டா. சகல கொடை விண்ணப்பங்களும் 2017 மார்கழி மாதம் 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்புக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், அடுத்துவரும் செயற்றிட்ட சுழற்சியின் போதே கவனத்தில் எடுக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும், அதுபற்றி முறையாக அறிவிக்கப்படும். அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான மீளாய்வு செயன்முறைகள் முழுமையாகப் பூர்த்தியாகும் வரை நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்பை குறித்த விண்ணப்பங்கள் தொடர்பில் தொடர்பு கொள்ளாதிருக்கவும். நீலன் திருச்செல்வம் நம்பிக்கைப் பொறுப்பின் நிகழ்ச்சித்திட்டக் குழுவினால் எடுக்கப்படும் திர்மானங்களே இறுதியானவையாகும்.

## செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கான இந்த அழைப்புப் பற்றிய விசாரணைகள்

இந்த அழைப்புப் பற்றிய ஏதேனும் கேள்விகள் எழுத்து மூலம் programme.manager@neelan.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2016 மார்கழி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். தொலைபேசி மூலமான விசாரணைகள் ஏற்கப்படமாட்டா.